1974 மார்ச் 7]

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த எப்போதும் வென்றானுக்கு அருகாமையில் குளம் அமைக்கும் திட்டத்திற்கு எப்போது மதிப்பீடு போடப்பட்டது? இதுவரை வெல்லாமைக்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, புள்ளி விவரங்கள் என்னிடம் இல்லை. ஆனால் எப்போதும் வென்றான் இந்த ஆண்டு வென்றுவிடுவான் என்று நம்புகிறேன்.

Production of gingelly oil

* 326 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to undertake a package programme for the production of gingelly oil; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, (அ) & (இ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கையில் எள்ளும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, நல்லெண்ணய் விலை மிகவும் உயர்ந்திருக்கிறது. இது ஒரு 'எசன்ஷியல் கமாடிட்டி' ஆக உபயோகப்படக் கூடியது. ஆகவே, இதன் உற்பத்தியை அதிகரிக்கவேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. ஆகவே, 'பாக்கேஜ் ஸ்கீம்' தயாரித்து இதன் உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, 'பாக்கேஜ் ஸ்கீமில்' சேர்க்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதினோம். அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, in the entire State of Tamil Nadu the best gingelly is grown in the Dharmapuri district especially in Hosur and Denkanikottah taluks. It is grown in about 50,000 acres and its oil-content is very rich and the cake is superior. If the package programme is introduced there, its

production would largely increase. So May I know from the Hon. Minister for Agriculture whether he will introduce the package programme in the Dharmapuri district?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Dharmapuri has been included in the Scheme which has been projected in the fifth Five-Year Plan.

திரு. அ. ஆறுமுகம் : எண்ணெய் விலை நாளுக்கு நாள் அதிக மாக இருப்பதால் வட மாநிலத்தில் கடுகு பயிரிடுகிறார்கள். நம் மாநிலத்திலும் கடுகு பயிரிட்டு கடுகு எண்ணெய் தயாரிக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கடுகும் நம் மாநிலத் தில் நன்றாக உற்பத்தியாகவில்லை. கடுகு உற்பத்தியைப் பெருக் கும் திட்டம் எதுவும் அரசு கைவசம் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த சிறப்புத் திட்டத்திலே சன் ப்ளவர் உள்ளிட்டு இது செயல்பட அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா ? அதிலிருந்து எவ்வளவு அதிகப்படியான உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : எண்ணெய் வித்து என்பதில் நிலக்கடலை, சூரியகாந்தி எல்லாம் அடங்கும். சூரிய காந்தியைப்பற்றித் தனிப் புள்ளி விவரம் என்னிடம் இல்லை.

திரு. கு. காமாட்சி: வலுத்தவன் வாழை போடவேண்டும், இளைத்தவன் எள்ளைப் போடவேண்டும் என்று சொல்வார்கள், தமிழ்நாட்டில் எள்ளே போடாமல் இருக்கிறார்களே, தமிழ்நாட்டில் இளைத்தவர்களே இல்லையா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இளைத்தவர் எள்ளைப் போடவேண்டும் என்கிற கருத்துக்குப் பொருள் வேறு. எள் எழுபது நாளில் விளைகிறது. அதைத் தனிப் பயிராக உற்பத்தி செய்ய முடியாது. ஊடு பயிராக, துணைப் பயிராகத்தான் போட வேண்டும். தற்போது திருச்சி மாவட்டத்திலும் எள் உற்பத்தி செய்யப்படுகிறது.

திரு. எம். தேவராசன் : சூரியகாந்தி எண்ணெயில் கொழுப்புச் சத்து அறவே இல்லை என்று செல்கிறார்களே, அதைப் பயன்படுத்தி வனஸ்பதி உற்பத்தியைப் பெருக்க முடியுமா ?

1974 மார்ச் 7]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சூரியகாந்தியில் கொழுப்புச் சத்துக் குறைவாக இருப்பதால் உடல் நலத்திற்கு ஏற்றது என்று சொல்வார்கள். அது வனஸ்பதித் தொழிற்சாலையிலும் பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது. அதற்கு நல்ல விலையும் இருக்கிறது, தற்போது.

திரு. கோவை செழியன்: தமிழ்நாட்டில் பயன்படுத்துகின்ற எண்ணெய் வகைகளில் பெரும்பாலும் தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய் போன்றவற்றில் நிறைய குல்ஸ்ட்ரால் சத்து குறிப்பாக இருப்பதால் இருதய நோய் வந்து திடீர் திடீர் என்று சாகிறார்கள். ஆனால், சூரியகாந்தி (சன் ப்ளவர்) போன்றவற்றின் எண்ணெயில் தொண்ணூற்று ஒன்பது சதவீதம் கொழுப்புச் சத்து இல்லாமல் இருப்பதாக விஞ்ஞானிகள் சொல்வதால் இதை ஊக்கப்படுத்த அரசாங்கம் என்ன திட்டம் வைத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சூரியகாந்தி பயிரிடுவதை ஊக்கப்படுத்துவதாக நான் ஏற்கனவே சொன்னேன். திடீரென்று மாரடைப்பு வருவது என்பது தமிழகத்தில் மிகக் குறைவு. மேற்கு நாடுகளில் சோயாபின்ஸ் பயிரிடுகிறார்கள். இங்கே சூரியகாந்தி விதைக்கின்றபோது 60 சதவீதம் தான் நல்ல விதைகள் கிடைக்கின்றன. நூற்றுக்கு நூறு விதை உண்டாகவேண்டுமென்றால் தேன்கூடு ஒன்றையும் அந்தத் தோட்டத்தில் வைக்க வேண்டும். பொதுவாக சூரியகாந்தி பயிரிடுகிறவர்கள் அங்கேயே தேன்கூடு ஒன்றையும் வைக்க ஏற்பாடு செய்தால் அவை அருமையாக விளையும்.

Sale of vegetables

*327 Q—Thiru R.R MUNUSAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to have a regulated market for vegetables in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:

(அ) & (இ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

@ 503–506-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.